**29.05.2024**

**CC.94/2017**

**PW-2 , லோகமணி**

**மனுவின் பேரில் மீண்டும் வரவழைக்கப்பட்டு எதிரி தரப்பில் கு.வி**

இந்த வழக்கின் எதிரி முருகேசனை எனக்கு தெரியும். நான் நிலையூரில் வசித்து வருகிறேன் என்றால் சரிதான். சம்பவம் நடந்த இடம் தனக்கன்குளம் பர்மாகாலனி. நிலையூருக்கும் பர்மாகாலனிக்கும் இடையே உள்ள தூரம் 30 கி.மீ இருக்கும் என்றால் சரிதான். நான் வீடு கட்டுவதற்காக சம்பவயிடத்திற்கு சென்றேன். அந்த இடம் என் பெயரில் உள்ளது. அந்த இடத்தை என் அப்பாவிடம் இருந்து வாங்கினேன். சுசிலா என்பவர் என் அப்பாவான அ.சா.1 னிடம் பணம் வாங்கி கொண்டு என் அப்பாவிற்கு பவர் கொடுத்தார். என் அப்பா எனக்கு கிரையம் கொடுத்துள்ளார். என் அப்பா பவர் வாங்கும் போது அனைத்து மூல அசல் ஆவணத்தையும் வாங்கினார். மேற்படி சொத்து சம்பந்தமாக முருகேசன் வங்கியில் பணம் வாங்கிய விபரம் தெரியுமா என்றால் இந்த இடத்திற்கு வாங்கவில்லை. அதன் அருகில் உள்ள 3 சென்ட் நிலத்திற்கு வாங்கியிருந்தார். இந்த வழக்கில் என் அப்பாவிற்கு வேண்டி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 2006 ல் எனக்கு கிரையம் எழுதி கொடுத்தார். எனக்கு இதை பற்றிய முழு விபரம் தெரியாது என்றால் சரியல்ல. தெரியும். சம்பவ தேதியில் மின்சார இணைப்பு கொடுக்க வேலை பார்த்துக் கொண்டிருந்தேன். சம்பவ நடந்த போது நாங்கள் அங்கு சென்றோமா என்றால் ஒரு வாரமாகவே நாங்கள் வேலை பார்த்துக் கொண்டிருந்தோம். சம்பவ தேதியில் தான் அந்த இடத்திற்கு சென்றோமா என்றால் சரியல்ல. சம்பவம் நடந்த போது சம்பவயிடத்தில் நான் என் கணவர் என் அப்பா இருந்தோம். என் சித்தப்பா இருந்ததாக போலிசார் சொல்லியுள்ளது அவர்களாகவே எழுதியுள்ளார்கள். எதிரி முருகேசன் எதில் சம்பவயிடத்திற்கு வந்தார் என்றால் புல்லட்டில் வந்தார். நாங்கள் கட்டியிருந்த வேலியை உடைத்துவிட்டு வந்தாரா என்றால் வேலி திறந்து தான் இருந்தது. என்னிடம் எதிரி என்ன செய்தார் என்றால் என்அப்பாவை தான் அடித்தார். சண்டை போட்டவுடன் அக்கம் பக்கத்தில் உள்ளவர்கள் வந்து விலக்கிவிட்டதால் நேரடியாக காவல் நிலையத்தில் புகார் கொடுக்க சென்றோம். எதிரி உடைகல்லை என் அப்பா மீது போட்டாரா என்றால் போட்டார். என் அப்பாவின் நெஞ்சில் நடுவில் போட்டார். உடைகல் சிறிதா பெரியதா என்றால் பதற்றத்தில் ஞாபகம் இல்லை. சம்பவ தேதியில் எதிரியை நாங்கள் தாக்கினோமா என்றால் இல்லை. என்னையும் சேலையை பிடித்து இழுத்தார். அதை போலிசாரிடம் சொல்லியுள்ளேனா என்றால் புகாரில் சொல்லியுள்ளேன். புகார்தாரர் என் அப்பா என்பதால் அவருக்கு அனுசரனையாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சம்பவ தேதியில் என் அப்பா மீது ஒரு வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். அந்த வழக்கை என் அப்பாவும் என் கணவரும் ஒத்துக்

கொண்டு முடித்துள்ளார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. என் அப்பா காயம் பட்டு 15 நாள் மருத்துவமனையில் இருந்தார். எதிரி கடன் வாங்கியதால் பவர் பத்திரம் எழுதிக் கொடுத்தார் என்றும் அதை மறைத்து என் அப்பா கிரையம் கொடுத்ததால் தான் இவ்வளவு பிரச்சினை என்றால் சரியல்ல. சம்பவ தேதியில் நாங்கள் இடத்திற்குள் சென்றதால் தான் பிரச்சினை என்றாலும் சம்பவத்திற்கு காரணமே நாங்கள் தான் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் மூல ஆவணமும் அனுபவமும் எதிரியிடம் தான் உள்ளது என்றால் சரியல்ல. தாவா சொத்து சம்பந்தமாக உரிமையியல் நீதிமன்றத்தில் அ.வ.எண்.195/2009 வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. என் கணவருக்கும் என் அப்பாவுக்கும் தான் தெரியும். 30.04.2012 அன்று அந்த வழக்கை நானே வாபஸ் வாங்கிவிட்டேன் என்றால் இல்லை. வழக்கு சம்பந்தமாக முழுவிவரமும் தெரியாமல் என் அப்பாவிற்கு வேண்டி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சம்பவத்தில் எதிரிக்கு தான் அதிக காயம் என்றும் எதிரி மீது பொய்யாக புகார் கொடுத்து பணம் மற்றும் பதவி பலத்தால் வழக்கு பதிவு செய்ய வைத்துள்ளோம் என்றால் சரியல்ல.

29.05.2024

CC. 94/2017

PW-5 நீதி

**மனுவின் பேரில் மீண்டும் வரவழைக்கப்பட்டு எதிரி தரப்பில் கு.வி**

நான் டிரைவர் வேலை செய்து வருகிறேன். அ.சா.1 விவசாயம் செய்கிறார். பணம் கொடுக்கல் வாங்கல் உண்டா என்றால் இல்லை. நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரி இரண்டு நபர்களுக்காக ஜாமீனுக்கு வேண்டி அ.சா.1 க்கு பவர் பத்திரம் எழுதிக் கொடுத்தார் என்றும் அதை மறைத்து என் மாமா கிரையம் கொடுத்ததால் தான் இவ்வளவு பிரச்சினை என்றால் சரியல்ல. சம்பவம் நடந்த போது நான் சம்பவயிடத்தில் இருந்தேனா என்றால் இல்லை. ஈ.பி அலுவலகம் சென்றிருந்தேன். சம்பவம் குறித்து யாரை விசாரித்து தெரித்து கொண்டேன் என்றால் சம்பவயிடம் வந்த போது அங்கிருந்த நபர்கள் காவல் நிலையம் சென்றுவிட்டதாக சொன்னார்கள். சம்பவத்தன்று நான் எதிரியை அடித்தேனா என்றால் இல்லை. எதிரி என் மீது புகார் கொடுத்து ஒரு வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். என்னிடம் காண்பிக்கப்படும் முதல் தகவல் அறிக்கையானது என் மீது பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். அது எ.த.சா.ஆ. 1 ஆக குறியீடுசெய்யப்படுகிறது. அதன் பேரில் எங்கள் மீது குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யபட்டது என்றால் சரிதான். குற்றப்பத்திரிக்கை எ.ம.சா.ஆ. 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி வழக்கு நான் ஒப்புக் கொண்டு அவதாரம் கட்டியுள்ளேன் என்றால் சரிதான். அந்த தீர்ப்புரை நகல் எ.ம.சா.ஆ. 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது. சம்பவ தேதியில் தான் நாங்கள் இடத்திற்குள் சென்றோம் என்றால் சரிதான். அ.சா.1 என் மாமனார் என்பதால் முதல் விசாரணையில் அவருக்கு அனுசரனையாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தாவா இடம் எதிரியின் அனுபவத்தில் உள்ளது என்றால் சரியல்ல. எங்களிடம் தான் உள்ளது.